[1974 சனவரி 21

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி கிராமமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மண்தோன்றிய காலந்தொட்டே பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஒரே ஒரு நதி தான் ஓடுகிறது. ஆகவே, அந்தப் பயன்களை அந்தப் பிரதேசங்களுக்கு விஸ்தரிப்பதற்கு அரசு கருணைகூர்ந்து முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்குக் கருணை இருக்கிறது. ஆற்றிலே நீர்தான் போதாது. அந்தக் காரணத்தினாலே அந்தப் பகுதிகளைச் சேர்ப்பதற்கில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குடகனாறு திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? மத்திய அரசு ஒப்புதல் அளித்துவிட்டதா? எப்பொழுது அளித்தது என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதன் மதிப்பீடு ரூபாய் 212 இலட்சம் ஆகும். மத்திய அரசின் ஒப்புதல் பற்றிய தகவல் இப்பொழுது இல்லை. ஆனால் நமது அரசு ஒப்புதல் அளித்து வேலை துவங்கியாகிவிட்டது.

கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம்

*** 43 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரூபாய் 319 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு, தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. காவிரி நீர்த்தகராறுக்கு தீர்வு காணும் வரையில், காவிரி நீர்ப்பள்ளத்தாக்கில் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்குவது விரும்பத்தக்கதாயிராது என்று இந்திய அரசு, மிக அண்மையில் இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. இந்திய அரசின் பதில் பரிசீலனையில் உள்ளது.

1974 சனவரி 21]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த கொல்விமலைத் திட்டத்திற்கு ஏற்கனவே இந்த அரசாங்கம் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசின் முன் அனுமதி பெறுமல் இந்த அரசாங்கம் எப்படி தொகையை ஒதுக்கியது? இவ்வளவு நாள் காலதாமதம் ஆவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தொகை ஒதுக்குவதற்கும், மத்திய அரசின் அனுமதிக்கும் சம்பந்தம் இல்லை. வேலை துவங்குவதற்கு முன் மத்திய அரசின் அனுமதி வாங்க வேண்டுமென்று இருக்கிறது. மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறேமே தவிர வேறல்ல.

இராசனேரி நீர்த்தேக்கத் திட்டம்

*44 வினு—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிபூண்டித் துணை வட்டத்தில் தேர்வாய் கிராம எல்லையில் அமையும் 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத் திட்டம்' எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: செங்கற்பட்டு மாவட்டம் கும்முடிபூண்டி துணை வட்டத்தில் மண் கொண்டத்திற்கு பதில் ஓர் அணைக்கட்டு ரூ. 2,20,000 செலவில் கட்டும் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்பார்வை பொறி யாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத்திட்டம்' நீண்ட நாட்களாக ஆய்வில் உள்ளது, அது எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆய்வு முடிந்தவுடன் முடிவடையும்.